(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1(9).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 செப்தெம்பர் 30 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2022 ஒக்தோபர் 18, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணி கொள்ளல் சட்டத்தின் கீழ், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங் களுக்கென கொள்ளப்படுகின்ற காணிகளுக்காகச் செலுத்தவேண்டிய இழப்பீடுகளையும் பிற நிருவாகச் செலவுகளையும் உரிய நிறுவனம் ஏற்க வேண்டும் என்பதையும்;

(ii) ஆயினும், அந் நிறுவனங்களுக்கு பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்படுகின்ற நிதி அக்கருமத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடுகளைக்கொண்டு நியதிச் சட்ட நிறுவனங்களுக்காக கொள்ளப்படுகின்ற தனியார் காணிகளை, அந்த நிறுவனங்களுக்கு உரிமை மாற்றல் செய்வதற்கான வழிமுறை;

(ii) அதற்கு ஏற்புடைய சட்டம்;

என்பன யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடுகளைக்கொண்டு நியதிச்சட்ட நிறுவனங் களுக்காக கொள்ளப்படுகின்ற தனியார் காணிகளை, காணி கொள்ளல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க உரிமை மாற்றல் சான்றிதழ் ஒன்றின் ஊடாக அந்த நிறுவனங்களுக்கு உரிமை மாற்றம் செய்யுமாறு காணி அமைச்சினால் பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அவ்வாறு பணிப்புரை வழங்குவதானது மேற்படி சட்டத்தின் ஏற்பாடுகள், காணிக் கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு முரணானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறாயின், இந்த நிலைமையைச் சீராக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

3154/2022

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி கூட்டுறவுச் சங்கங்களில் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி கூட்டுறவுச் சங்கங்களினால் நிருவகிக்கப்படுகின்ற பிரதேச விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கூட்டுறவுச் சங்கங்களினால் வழங்கப்படுகின்ற சேவைகள்;

(ii) குருநாகல் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையை முன்னேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்;

யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3164/2022

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இலங்கை மின்சார சபையின் நட்டம் ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு நட்டமடைவதற்கு ஏதுவான காரணிகள் யாவை என்பதையும்;

(iii) இலங்கை மின்சார சபையை மீளமைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி மீளமைப்புச் செயன்முறையின் விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3169/2022

கௌரவ மயந்த திசாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலையிலும் மாகாண பாடசாலையிலும் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையிலும் அதிபர் மற்றும் ஆசிரியர் பதவிகளில் தற்போது காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3206/2022

கௌரவ மிலான் ஜயதிலக்க,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) சூரிய கூரைப் பலகங்கள் மூலம் தேசிய மின் கட்டமைப்புக்கு மின்சாரத்தை வழங்கும் வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி சூரிய கூரைப் பலகங்கள் மூலம் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் மின்சார அலகுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி சூரிய கூரைப் பலகங்கள் மூலம் தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்கப்படும் மின்சார அலகுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மின்சார அலகொன்றிற்காக பாவனையாளருக்குச் செலுத்தப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3220/2022

கௌரவ சுதத் மஞ்சுல,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கென ஆண்டுதோறும் வெளிநாட்டுப் புலமைப் பரிசில் வழங்கப்படுகிறதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்தப் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்ற முறையியல் யாது என்பதையும்;

(iii) மேற்படி புலமைப் பரிசில் வழங்கப்படுகின்ற பாடத் துறைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி புலமைப் பரிசில் வழங்கப்படுகின்ற நாடுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வழங்கப்பட்டுள்ள புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3231/2022

கௌரவ ஹர்ஷண ராஜகருணா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக 1000 தேசிய பாடசாலைகளை அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்துவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் இன்றளவில் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டு, வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மிகுதியாகவுள்ள பாடசாலைகள், தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) அதற்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகள் மத்திய அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3233/2022

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு அரசாங்க வேலைவாய்ப்புகளுக்காக பட்டதாரி பயிலுநர்களை உள்ளீர்ப்புச் செய்கையில் உள்வாரி மற்றும் வெளிவாரி பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்பதனை அறிவாரா என்பதையும்;

(ii) பட்டதாரிகளை பயிலுநர்களாக உள்ளீர்ப்புச் செய்கையில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் உள்ளீர்ப்புச் செய்யப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) அரசாங்க வேலைவாய்ப்புகளுக்காக விண்ணப்பங்களைக் கோருகின்ற போது அதுதொடர்பில் வலியுறுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) பயிலுநர்களாக உள்ளீர்ப்புச் செய்யப்படாத வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் தீர்வு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3260/2022

கௌரவ மர்ஜான் பளீல்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினக்கல் ஏற்றுமதியின் போது அறவிடப்படுகின்ற வரி வகைகள் யாவை என்பதையும்;

(ii) இரத்தினக்கல் மூலம் கிடைக்கின்ற வருமானத்தின் மீது அறவிடப்படுகின்ற வரி வகைகள் யாவை என்பதையும்;

(iii) இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்களுக்கு வரிச் சலுகைகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(iv) இரத்தினக்கல் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3268/2022

கௌரவ திலிப் வெதஆரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கியானது 2015 ஆம் ஆண்டு முதல் 2020 வரையிலான காலப்பகுதியில் 10 நகர சபைகளை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டத்திற்கு உதவியளித்தது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காக தங்காலை நகர சபை தெரிவு செய்யப்பட்டது என்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்தின் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்தின் பணிகளை மீள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2022 ஒக்தோபர் 19, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

31/2022

கௌரவ புத்திக பத்திறண,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப ஶ்ரீ லங்கன் எயார் லைன் நிறுவனத்தின் தற்போதைய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் ஆண் மற்றும் பெண் விமான நிலையச் சேவை முகவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) விமான சேவை பெண் பணியாளர்களில் விமானப் பணிப் பெண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) விமானப் பணிப் பெண்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது பரிசீலிக்கப்படும் கல்வி மற்றும் பிற தகைமைகள் தனித்தனியே யாவையென்பதையும்;

(ii) விமானப் பணிப் பெண்களை ஆட்சேர்ப்புச் செய்யும்போது திருமணமாகாத நிலை குறைந்தபட்ச தகைமையாக கருதப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) திருமண நிலையை மறைத்து சில பெண்கள் விமான சேவை பெண் பணியாளர்களாக சேவையில் இணைந்துள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இதன் காரணமாக தகைமைகளைப் பூர்த்தி செய்த சிலருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இது சம்பந்தமாக விசாரணை நடாத்தி மேற்படி இ (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விமான சேவை பெண் பணியாளர்களாக சேவையில் இணைந்துள்ள பெண்களுக்கும் இவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்ட ஆட்களுக்கும் எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

298/2022

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குண்டசாலை, திகன பிரதேசத்தின் அளுத்வத்த, கங்கபிட்டிய, விஜய ஶ்ரீ கம, அக்கர 30, அம்பகொட்டே ஆகிய பிரிவுகளில் சுண்ணாம்புக் கைத்தொழில் மேற்கொள்ளப்படுகிறது என்பதையும்;

(ii) திகன பிரதேசத்தில் நில அதிர்வு ஏற்பட மேற்படி கைத்தொழில் தாக்கம் செலுத்தியுள்ளதா என்பதை அறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்பதையும்;

(iii) சட்ட ரீதியான உரிமங்களை வழங்கும்போது மேற்படி முடிவுகளையும் சூழல் குறித்த சட்டங்களையும் கவனத்தில்கொள்ள வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேசங்களில் சொத்துகளுக்கும் சுற்றுச் சூழலுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து அறிந்துவைத்துள்ளாரா என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்களில் நில அதிர்வு ஏற்படுவதற்கு சுண்ணாம்புக் கைத்தொழில் தாக்கம் செலுத்தியுள்ளமை ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், உரிமங்களை வழங்கும்போது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படுகிறதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பிரதேசங்களில் உள்ள உரிமம்பெற்ற சுண்ணாம்புக் கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கையையும்;

(ii) அனுமதியற்ற சுண்ணாம்புக் கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கையையும்;

(iii) இவர்களுக்கு எதிராக எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளையும்;

(iv) சுண்ணாம்புக் கைத்தொழில் காரணமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

345/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் முட்டை உற்பத்தியின் அளவு ஒவ்வொரு ஆண்டிலும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்குறித்த காலப்பகுதியினுள் முட்டை இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(iv) இலங்கையின் முட்டை உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

674/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில், ஹிங்குரக்கொட உட்பட்ட பல பிரதேசங்களில் வசிக்கும் பெரும்பாலான குடும்பங்கள் அலங்கார மலர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர் என்பதையும்;

(ii) அத்தகைய மலர்ச் செய்கையாளர்களுக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக்கொள்வதில் காணப்படுகின்ற சிரமங்களையும், மலர்களுக்கென நிலையானதொரு விலை இல்லாமை காரணமாக இவர்கள் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறாயின், மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

967/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் தற்போதைய நிலைமை;

(ii) குறித்த தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை;

(iii) அதற்கென முதலீடு செய்யப்பட்ட தொகை மற்றும் அத்தொகையை முதலீடு செய்த திகதி;

(iv) அதன் மூலம் உருவாக்கப்படும் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை;

யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தொழிற்சாலை தொடர்பில் ஊழல் மற்றும் மோசடி இடம்பெறுவதை அறிவாரா என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1107/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் ஆராய்வதற்காக சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவையென்பதையும்;

(iii) பிணைமுறி மோசடியுடன் நேரடியாக தொடர்புடைய நபர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி பிணைமுறி மோசடி தொடர்பில் இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1514/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தப்பட முன்னர் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களாகச் செயற்பட்ட வெளிக்கள அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலரும் சேவையாற்றிய நிறுவனம் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) அவர்களில் தவிசாளர்/துணைத் தவிசாளர்/மாநகர முதல்வர்/ மாநகர துணை முதல்வர்களாகச் செயற்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்கள் யாவையென்பதையும்;

(iv) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களில் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களாகச் செயற்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அவர்களில் தவிசாளர்/துணைத் தவிசாளர்/மாநகர முதல்வர்/ மாநகர துணை முதல்வர்களாகச் செயற்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிக்கள அலுவலர்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தடை செய்து அப்போதைய அரசாங்கம் கொண்டுவந்த சட்டங்களின் காரணமாக (அ)(iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனை சீர் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iii) தொடர்புடைய சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) அத்திகதி யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1526/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாவெவ, பென்னும அரசாங்க வைத்தியசாலையானது மகாவலி இயக்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டதொரு வைத்தியசாலை என்பதையும்;

(ii) தற்போது மேற்படி வைத்தியசாலையின் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையின் கட்டடங்களைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1672/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தோட்டப்புறங்களில் வாழும் குடும்பங்களில் தற்போது சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தோட்டப்புறங்களில் வாழும் அதிகளவான குடும்பங்களுக்கு சமுர்த்தி அனுகூலத்தை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1895/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சேதனப் பசளையை பிரபல்யப்படுத்தும் வேலைத்திட்டம் காரணமாக 2022 ஆம் ஆண்டின் பெரும்போகத்தில் நெல் அறுவடையானது பாரியளவில் குறைவடைந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்காக நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இன்றளவில் வழங்கப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இது வரையில் நட்டஈடு வழங்கப்பட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட வாரியாக தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(v) நட்டஈடு வழங்குகையில் பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2022 ஒக்தோபர் 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2000/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படும் வாகனங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் மற்றும் டயர்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது என்பதையும்;

(ii) அதன் காரணமாக வாகன உரிமையாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர்களுக்கான இறக்குமதி வரையறுக்கப் பட்டுள்ளமை மேற்குறித்த தட்டுப்பாட்டிற்கு காரணமாகியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2042/2022

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 1992 ஆம் ஆண்டில் பெருந்தோட்டங்களில் மறுசீரமைப்பொன்று இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(ii) அதன்போது, அரச தோட்டங்கள் 22 பிராந்திய பெருந்தோட்டக் கம்பெனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டன என்பதையும்;

(iii) அத்தகைய கம்பெனிகளில் பல, தற்போது தமது குத்தகையை வேறு கம்பெனிகளுக்கு கைமாற்றியிருப்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் அரச தோட்டங்களை குத்தகைக்கு எடுத்த, பிராந்திய பெருந்தோட்டக் கம்பெனிகள் யாவை என்பதையும்;

(ii) ஆரம்ப குத்தகை ஒப்பந்தங்களின் அடிப்படையில் இன்றளவில் தோட்டங்களை நடத்தி வருகின்ற கம்பெனிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2060/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஹம்பாந்தோட்டை சீமேந்துத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கான முதலீடு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கான முதலீட்டு ஒப்பந்தத்தை மேற்கொண்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2170/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலென்பிந்துனுவெவ பிரதேசத்தின் கெட்டலாவ, துட்டுவெவ, திசாவெவ மற்றும் மயில்கஸ்வெவ ஆகிய பிரதேசங்களில் பாரிய அளவில் வெங்காயம் பயிரிடப்பட்டது என்பதையும்;

(ii) வெங்காயத்திற்கு உரிய விலை கிடைக்காத காரணத்தினால் வெங்காயம் அதிகளவில் தற்போது விவசாயிகளின் வீடுகளில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளால் களஞ்சியப்படுத்தப்பட்ட வெங்காயத்தினை விற்பனை செய்துகொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதனை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2517/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பட்டப்பின் படிப்பினை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் மேற்குறிப்பிட்ட விரிவுரையாளர்களில் பட்டப்பின் படிப்பை இடைநடுவே நிறுத்தியுள்ள விரிவுரையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அதன் காரணமாக வீண்விரயமாகியுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2538/2022

கௌரவ மதுர விதானகே,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கப்றுக நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2554/2022

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை, தேசிய பாதுகாப்புக் கல்லூரிகளில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், மோசடி அல்லது சட்ட விரோதச் செயல் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் தெரிவிக்கப்பட்டுள்ள செயல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், இவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயல்களைத் தடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2566/2022

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயணிகள் போக்குவரத்துக்கு மேலதிகமாக இலங்கை புகையிரதச் சேவை மூலம் சரக்குப் போக்குவரத்து மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு போக்குவரத்து செய்யப்படுகின்ற சரக்குகளின் வகைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சரக்குப் போக்குவரத்து மேற்கொள்ளப்படுகின்ற பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) சரக்குப் போக்குவரத்து மூலம் இலங்கை புகையிரதத் திணைக்களம் ஈட்டுகின்ற வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சரக்குப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு இலங்கை புகையிரதத் திணைக்களம் தனியார் நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தனியார் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை எட்டும் நடவடிக்கை வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2585/2022

கௌரவ லலித் வர்ண குமார,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறியளவிலான தொழில்முயற்சியாளர்களுக்காக “ஜய இசுரு” நிவாரணக் கடன் திட்டம் இன்றளவில் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி கடன் திட்டத்தின் மூலம் கடன் பெற்றுள்ள தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) பெறப்பட்ட கடன் ஏற்புடைய தொழில்முயற்சிக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற் குறிப்பிட்ட கடன் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அனுகூலங்கள் இன்றளவில் கிடைத்துள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி கடன் திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2886/2022

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பிராந்திய அலுவலகங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பிராந்திய அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) குறித்த அலுவலகங்களை நடாத்திச் செல்வதற்கு வாடகை அடிப்படையில் கட்டடங்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி கட்டடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள கட்டடங்களில் அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி பிராந்திய அலுவலகங்களுக்கென செலுத்தப்படும் வருடாந்த வாடகைத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2022 ஒக்தோபர் 21, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2590/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் பெரும்பாலான பஸ் டிப்போ தளங்களின் நிலைமை மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) இந்த நிலைமையானது பிரயாணிகளுக்கு வினைத்திறன்மிக்க போக்குவரத்துச் சேவையினை வழங்குவதற்கும் ஊழியர்களின் நலனோம்பல் நடவடிக்கை களுக்கும் தடையாக அமைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் டிப்போ தளங்களை நவீனமயப் படுத்துவதற்கான கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இவ்வாறு நவீனமயப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஒவ்வொரு டிப்போவினதும் பெயர், அது உள்ளடங்கும் பிரதேசத்தின் பெயர், மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதித் தொகை, பணிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் காலகட்டம் ஆகியவை வெவ்வேறாக யாவை;

(iii) பஸ் டிப்போ தளங்களை நவீனமயப்படுத்துவதற்கான கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படமாட்டாதெனின், அதற்கான காரணம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2604/2022

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ள கடன் பெறும் எல்லைகள்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டியுள்ள தவணைக் கடன் மற்றும் வட்டி;

(iii) 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடன் பெறும் எல்லைகள்;

(iv) 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டியுள்ள தவணைக் கடன் மற்றும் வட்டி;

ஒவ்வொரு வருடத்திற்கமைவாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) செலுத்த வேண்டியுள்ள கடன் தொகையை விஞ்சி, கடன் எல்லைகளை அங்கீகரிப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2624/2022

கௌரவ டீ. வீரசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “1000 தேசிய பாடசாலைகள் திட்டத்தின்” கீழ் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) எஞ்சிய தேசிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) தற்போதுள்ள தேசிய பாடசாலைகளுக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளிட்ட ஏனைய வசதிகள் மேற்படி திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளுக்கு வழங்கப்படுமா என்பதையும்;

(iv) மேற்படி திட்டம் நிறைவு செய்யப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(v) ஆசிரியர் பற்றாக்குறை தீவிரமாக நிலவும் பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2632/2022

கௌரவ சம்பத் அதுகோரல,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டுமானங்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் அகற்றப்பட்டுள்ள சட்ட விரோத கட்டுமானங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா;

(iv) ஆமெனில், இவ்வாறு வழங்கப்பட்டுள்ள காணிகளின் எண்ணிக்கை யாது;

(v) மேற்படி காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் ஈட்டப்பட்டுள்ள வருமானம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2642/2022

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லக் சதொச நிறுவனத்தின் கிளை வலையமைப்பை வீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) தற்போது இந்நிறுவனம் கொண்டுள்ள கிளைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நுகர்வோர் தட்டுப்பாடின்றி பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அரிசி, பருப்பு, சீனி, செத்தல் மிளகாய், கோழி இறைச்சி, முட்டை மற்றும் கோதுமை மா முதலிய பொருட்களை தற்போது சந்தையில் காணப்படும் விலையை விட குறைவான விலைக்கு பெற்றுக்கொடுக்கக்கூடிய சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், இவ்விடயம் தொடர்பில் தற்போதுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2645/2022

கௌரவ காமினி வலேபொட,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2021ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட இரசாயன பசளைக்கான தடை காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு கணக்கிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நெல், தேயிலை, இறப்பர், கறுவா, தென்னை மற்றும் காய்கறிகள் போன்ற ஒவ்வொரு பயிர் வகையினதும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி தனித் தனியே யாதென்பதையும்;

(iii) இரசாயனப் பசளையை தடை செய்ததன் காரணமாக விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளிலிருந்து விலகி உள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2651/2022

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கம்பெனிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கம்பெனியும் அமைந்துள்ள இடம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) சபைக்குச் சொந்தமான சுற்றுலா விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி நிறுவனத்தின் எதிர்கால அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2661/2022

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அலங்கார மீன் ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்காக இன்றளவில் முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றுக்கிடையில் முறையான ஒருங்கிணைப்பில் மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) புதிய அலங்கார மீன் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்வதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2689/2022

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளையும் தனியார்மயமாக்கப்பட்டிருந்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தையும் அப்போதைய அப்பலோ வைத்தியசாலையையும் மீண்டும் அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்குமாறு உயர் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் இவற்றுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக 2016.08.23 ஆம் திகதி என்னால் வாய்மூல விடைக்கான வினாவொன்று கேட்கப்பட்டதென்பதையும்;

(ii) கடந்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாத காரணத்தினால் சட்டமா அதிபர் திணைக்களம் அது தொடர்பில் சீ.ஆர்.ஐ/159/2016 எனும் இலக்கத்தின் கீழ் மீண்டும் கோப்பு ஒன்றினை ஆரம்பித்து 55 நபர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதோடு இன்னும் சிலரிடம் வாக்குமூலங்களைப் பதிவுசெய்த பின்னர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக மேற்படி வினாவிற்கு பதில் வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) அதன் பிரகாரம், விசாரணை நடவடிக்கைகள் நிறைவடைந்து தகவல் பதிவேட்டிலிருந்து எடுபகுதிகள் கிடைத்த பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென சட்டமா அதிபர் அறிவித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) அவ்வாறாயின், அதன் பின்னர் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2725/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "பெட்டிகலோ கெம்பஸ் (பிரைவெட்) லிமிடெட்" என்ற பெயரில் நிறுவனமொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி பெயரில் பல்கலைக்கழகமொன்று பேணப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(iii) இப்பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(iv) இப்பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படும் பாடநெறிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்கு நிதி பெறப்பட்ட முறை யாதென்பதையும்;

(ii) இப்பல்கலைக்கழகத்தைப் பேணிவருவதற்காக நிதி பெற்றுக்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒரு மாணவரிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?